RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s136

OPEN ACCESS

# திருத்தெள்ளேணத்தில் திருவருள் நோக்கு

## இரா. மதன் குமார் [அ, *]

[அ] மொழிகள் துறை, கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம், கோயம்புத்தூர்- 641021, தமிழ்நாடு, இந்தியா

# Thiruthellenathil Thiruvarul Nokku

## R. Madhan Kumar

[a] Department of Languages, Karpagam Academy of Higher education, Coimbatore - 641021, Tamil Nadu, India

* Corresponding Author: madhankumar493@gmail.com

Received: 04-11-2020
Revised: 15-06-2021
Accepted: 18-06-2021
Published: 21-06-2021

Check for updates

### ABSTRACT

The eleventh thirupathigam is the 'Thiruthellenam' in the Thiruvasagam by Manikkavacakar, a vadavur philanthropist. This exclusion is a spread of the praise of the Lord, as the women poured out. In addition, Manikkavacakar himself is the guru of wisdom and guides the rare Lord into the web of love. Its literary purpose is praised by the Thiruvagasam text books as 'The Journey of Grace to Lord Shiva', i.e., 'The cost of achieving with Lord Shiva'. It is the joyful thrill of Manikkavacakar, who is cultured in bhakti and does not separate Shiva even when the atom is not separated. This article explains the ability of Lord Shiva to have the supreme technique, the wisdom and devotion of Manikkavacakar in the amendment.

**Keywords:** Thiruthellenam, Thiruvasagam, Manikkavacakar, Lord Shiva,

## முன்னுரை

சித்தம் சிவமாகி, செய்வன எல்லாம் தவமாக விளங்கவல்ல கன்னிப்பெண்கள், அருளனுபவப் பரவச மேலீட்டில் சிறுபறை கொட்டி, இறைவனின் பொருள்சேர் புகழினை மகிழ்ந்து பாடியாடுவது, திருத்தெள்ளேணமாகும். திருவாசகத்தின் திருத்தெள்ளேணத்திலுள்ள ஒவ்வொருபாடலின் இறுதியிலும், 'தெள்ளேணம் கொட்டாமோ' என்ற தொடர் இடம்பெற்றுள்ளது. 'தெள்' -தெளிந்த ஓசை. ஏணம் - மான். மானின் தோலால் ஆன படகமாகிய தோற்கருவியைக் கொட்டி ஆடுகிற விளையாட்டை தெள்ளேணம் எனலாம். கைகொட்டி ஆடுதலாகிய கும்மிக்கொட்டையும் 'தெள்ளேணம் கொட்டுதல்' எனக் குறிக்க வாய்ப்புண்டு. பக்திநெறியில் சிவனோடு அனைவரும் இயைந்து செல்லுதல்', 'சிவனுடனான பேரின்ப அனுபவங்கள் இடையறாமல் நிற்றல்' எனத் திருவாசக உரை நூல்கள், திருத்தெள்ளேணம் என்பதற்குப் பொருள் விளக்குகின்றன.

இறைவன், தான் கெடாத தனித்தன்மையனாக விளங்குதலும், கோல்வளையாளாகிய சத்தியுடன் பிரிவின்றி விளங்குதலும், அருவம்-உருவம்-அருவுருவம் கொள்கின்ற பரத்துவநிலைகளும் திருத்தெள்ளேணத்தில் விளக்கப்பட்டுள்ளன. மணிவாசகருக்காக இறைவன் மண்ணுலகில் ஞானகுருவாக வந்தருளிய எளிவந்த கருணையும், ஞானதீட்சையால் மெய்யுணர்வு வாய்க்கப்பெற்ற நிலைகளும் திருத்தெள்ளேணத்தில் இடம்பெற்றுள்ளன. உயிரானது, 'நான்', 'எனது' என்ற ஆணவநிலைகள் அகன்றிருத்தலும், அனைத்தெலும்பும் உள்நெகிழ்ந்து, ஆனந்தக்கண்ணீர் அருவியாகப்

பொழிதலும் எங்கும் நிறைந்திலங்குகின்ற இறைவனுக்கு, உள்ளத்தைக் கோயிலாக்கி உயர்தலுமாகிய பக்திநிலைகளும் திருத்தெள்ளேணத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

## அத்துவிதமும் தாதான்மியமும்

இறைவன் அனைத்துயிரையும் எடுத்துச்சுமக்கின்ற பெருங்கருணை உடையவன். அளப்பரிய அவனது அருள்நோக்கத்தை முன்னிட்டு உமாபதிசிவனார் இறைவனை, 'எடுத்துச்சுமப்பவன்' என்று போற்றியுள்ளார். அனைத்து உயிரினுள்ளும் ஒன்றாதல்-வேறாதல்-உடனாதல் என்ற நிலைகளில் இறைவன் கலந்திருக்கின்ற இருப்பானது, அத்துவிதம்- 'இருமையில் ஒருமை' எனப்படும் (Vasanthakumar, 2019).

இறைவன், அனைத்துயிரினுள்ளும் இரண்டறக்கலந்து நிற்பினும் அவற்றால் தன்னிலை மாறாத தனிப்பொருளாக விளங்கவல்லவன். 'தான் கெடுதலும், மீள நிலைப்படுதலுமாகிய இயல்பு மாற்றங்கள் இல்லாத அவனுக்கேயுரிய தனிப்பெருந்தன்மையினை மணிவாசகர் திருத்தெள்ளேணத்தில்,

'வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல்நீர் மண்கெடினும்

தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத தன்மையன்' (திருத்தெள்ளேணம்: பா.18)

என்று குறித்தருளியுள்ளார் (Vasanthakumar, 2016).

ஐம்பூதக்கலப்பாகிய உலகம் தன்னிலையிலிருந்து திரிந்தாலும், திரிபும் தோற்றக்கேடுமற்ற தனிப்பொருளாக விளங்குபவன். அரும்பொருளாகிய அவன் நீங்காதபேரின்பநிலையினை மன்னுயிர்களுக்கு அருளவேண்டி சத்தியும் சிவமுமாக விளங்குதலாவது, தாதான்மியம் - 'ஒருமையில் இருமை' என அமைகிறது. அத்தன்மையினை, 'நெருப்பும் அதன் தன்மையாகிய சூடும் போன்றது' எனலாம்.

சத்தியுடன் பிரியாமலிருந்து உயிர்களை ஈடேற்றுகின்ற பெருநோக்கத்தில் இறைவன் படைத்தல் முதலான ஐந்தொழில் புரிகின்றான். அதன் குறியீடாகத் தில்லை அம்பலத்தில் அம்மை காணும்படி ஆடுகின்ற இறைவனின் திருக்கோலத்தை வணங்குகிறோம். மருந்தின் வீரியத்தைப் பொறுக்க இயலாத குழந்தைக்குத் தேவையான மருந்தினை தாய் உண்டு, தாய்ப்பாலை மருந்தாகத் தருவது உலகவழக்கு. அவ்வண்ணமே, இறைவனின் ஐந்தொழில் நடனத்தின் கருணையைத் தான் கண்டு, தனது அருள்பார்வையாக அடியார்களுக்கு அம்மை அளித்தருள்கிறாள் என்பது தத்துவவழக்கு. இதனைக் குமரகுருபரர்,

'திருந்திழை காணச் சிற்சபை பொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்த' எனச் சுட்டியுள்ளார் (Kumaraguru Swamigal, 2004).

மணிவாசகர் மேற்கண்ட அருள்நோக்கத்தை திருத்தெள்ளேணத்தில், 'கோல்வளையால் நலம்பாடி, அம்பலத்தே ஆடுகின்ற சிலம்பாடல் பாடித் தெள்ளேணம் கொட்டுவோம்' எனக் குறித்தருளியுள்ளார்.

## ஆன்ம ஈடேற்றத்துக்குத் திருவருள் கருவியாதல்

அறிவிக்க அறிகின்ற ஆன்மா - கண். ஆன்ம அறிவு - கண்ணொளி. ஆன்மாவின் அறிவை விளங்கச்செய்கின்ற சூரிய ஒளி - இறைவனின் திருவருள்.

ஆன்மாவின் அறியாமை - இரவில் பொருளையும், கண்ணையும் மறைத்திருக்கின்ற இருள். கண், காணுகின்ற வாய்ப்புடையதாயினும், இருளில் அதற்குப் பொருள் தென்படுவதில்லை. பகல்பொழுதிலும்கூட கண்ணொளியுடன் சூரியஒளி இயைந்துநிற்கின்ற பொழுதிலேயே அதன் பார்க்கின்ற திறன் விளங்குகிறது.

சூரியவொளியானது கண்ணொளியுடன் இயைந்துநின்று, கண்ணில் பார்வைத்திறனை விளங்கச்செய்கிறது. கண்ணில் ஒளிவிளங்குவதற்குச் சூரியவொளி அடிப்படையாவது போல, ஆன்மாவில் சிவம் விளங்குவதற்குத் திருவருளே அடிப்படையாகிறது. கண்ணுக்குச் சூரியவொளி விளக்கத்தைத் தருவதுபோல, சிவத்தை அறிகின்ற மெய்யுணர்வை ஆன்மாவுக்குள் திருவருள் தோற்றுவிக்கிறது. இது திருவருளின் காட்டும் உபகாரம் எனப்படும்.

கண் காணுகின்ற தன்மை பெற்றிருப்பினும் அது தானாகவே சென்று காணுதலும், குறித்த ஒன்றைக் காண்கிறேன் என்று உய்த்துணர்கின்ற தன்னுணர்வும் இல்லாதது. அதுபோலவே உயிரும், சிவத்தை அறிகின்ற பக்குவத்தைப் பெறினும், அது தானாகவே சென்று சிவத்தைப் பற்ற இயலாது. கண்ணுக்குச் சூரியவொளி பொருளைக்காட்டியும், குறித்தஒன்றை அறிகின்றோம் என்பதையும் உயிரறிவில் விளங்கச்செய்கிறது. சூரியவொளி கண்ணில் இயைந்துநின்று, அறிவுணர்ச்சியை நிலைநிறுத்துகிறது. அதுபோல திருவருள் உயிரின் அறிவுக்குள் அறிவாக நின்று சிவத்தை அறியச்செய்கிறது. திருவருளின் இத்தகைய பேருதவியை, 'காணும் உபகாரம்' எனலாம்.

திருவருளின் காணும் உபகாரம் மற்றும் காட்டும் உபகாரம் ஆகியவற்றை அறிவுறுத்தவேண்டியே மணிவாசகர் திருவாசகத்தில், 'அவனருளால் அவன் தாள் வணங்கி' என்று பாடியுள்ளார்.

அறிவுப்பொருளாகிய உயிரானது, உலகியலை மட்டுமே சார்கின்ற அறியாமையில் ஆழ்ந்திருப்பது, பெத்தநிலை-கட்டுநிலை எனப்படுகிறது. உயிரின் பெத்தநிலையில் சத்தியானது, திரோதான சக்தி-மறைப்பாற்றல் என்றளவில் விளங்கும். அதனால், உயிரானது அறியாமையே தனது நிலையாகச் செயல்படும். உயிரிடத்தில் உடல், கருவி, உலகு மற்றும் நுகர்ச்சிப்பொருள்களில் மட்டுமே நாட்டம்மிகுகிறது. அதனால், தன்முனைப்புடன் வினைகளைப் பெருக்குகிறது. வினைவழியே மாறி மாறிப் பலபிறப்புகளிலும் பிறந்திளைத்து இளைப்பாறுதலை நாடுகிற பக்குவத்தைப் பெறுகிறது. உயிரின் பக்குவநிலையால் அதனறிவில் சத்தியானது திருவருளாக மேம்படுகிறது. அதனிடத்தில் இருவினையொப்பும், மலபரிபாகமும் விளங்குகிறது. அதுவே உயிரின் சிவச்சார்புக்கான வாய்ப்பாக, சரியை முதலான தவநிலைகள் குருவருளால் வாய்க்கிறது. இவ்வாறு, சத்தியானது சிவத்தை இணைபிரியாத நிலையை, 'தாதான்மிய சம்பந்தம்' என்கிறோம். தாதான்மியமாவது, இருமையில் ஒருமை' எனப்படும். சிவமும் சத்தியும் பொருளளவில் ஒன்றாகவும், செயலளவில் இரண்டாகவும் விளங்குகின்றநிலையாகும். இத்தத்துவத்தை அறிவுறுத்தவேண்டியே மணிவாசகர், 'கோல்வளையாள் நலம்பாடி' என்று திருத்தெள்ளேணத்தில் திருவருளைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

## சிலம்பாடலைப் பாடுவோம்

ஞானகுருவின் வாயிலாக சரியை முதலான நால்வகை நன்னிலைகளுக்குத் தலைப்படுகின்ற உயிரானது, 'யான்', 'எனது' என்ற ஆணவமல மயக்கங்கள் நீங்கி சிவத்தில் அழுந்துகிறது. சீவன்முத்தநிலையில், திருவருளே சிவம் என்பதை உயிர் உணர்கிறது. அத்தத்துவத்தை உருவநிலைக்குறியீடாக உணரவேண்டியே, திருவருளை இறைவனின் திருவடி என்று வணங்குகிறோம்.

தில்லையில் மணிவாசகர் திருக்கோயிலின் யோகாம்பிகை சன்னதியில் திருவடியே சத்திஉருவாக விளங்கக் காணலாம்.

தில்லையில் அம்பலத்தில் ஆடுகின்ற பெருமானின் எடுத்ததிருவடியானது, அம்மைக்குரிய இடது திருவடியாகும். திருவருளாகிய சத்தியைச் சார்ந்து சிவமாகிய தம்மைச் சேரலாம் என்பதை உணர்த்தவேண்டியே ஆடல்வல்ல பெருமானார் தமது வீசுகரத்தால் சத்தியினிடமாகிய இடது திருவடியைச் சுட்டுகின்றார் எனலாம். திருவருளைப் பிரியாதிருந்து சிவத்தியானத்தின் வழியே சிலம்போசை கேட்டுய்கின்ற நாதஒலிப்பேறு அடியார்களுக்கும் வாய்க்கின்றவகையில் மணிவாசகர் திருத்தெள்ளேணத்தில், 'அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற சிலம்பாடல் பாடுவோம்' என்று அறிவுறுத்தியுள்ளார்.

'குலம்பாடி கொக்கிற கும்பாடிக் கோல்வளையாள்

நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாள்தோறும்

அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற

சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ' (திருத்தெள்ளேணம்.பா.20)

என்றமைந்த திருப்பாடலில், இறைவன் பெருநஞ்சினைத் தானுண்டு மன்னுயிர்களைக் காத்த அறக்கருணையையும், கொக்கின்வடிவிலிருந்து உயிர்களைத் துன்புறுத்திய குரண்டாசுரனை மறக்கருணையால் ஆட்கொண்ட அருளாடலையும் சுட்டியுள்ளார் (Vasanthakumar, 2016). தில்லை அம்பலத்தில் விளங்குகின்ற பெருமானின் திருமுடியில் கொக்கிறகு விளங்குகின்ற திருஅழகை இன்றும் கண்டு வணங்குகின்ற வாய்ப்புள்ளது. மணிவாசகர் தில்லை அம்பலத்திலிருந்து தெள்ளேணம் பாடியதற்குச் சான்றாக, இறைவனின் திருமுடியில் விளங்குகின்ற கொக்கிறகையும் பாடலில் சுட்டியுள்ளதைக் குறிப்பிடலாம்.

## திருமேனி கொள்கின்ற எழில்கருணை

குறியும் குணமுமற்ற அரும்பொருளாகிய இறைவன், உயிர்களின்மீது கொண்ட பெருங்கருணையின் வெளிப்பாடாக, அருவம்-உருவம்-அருவுருவம் என்னும் நிலைகளில் அருளுகின்றான். அருவநிலையாவது, அத்துவாநிலையிலான இருப்பாகும். அத்துவா என்றால் வழி என்று பொருள். மன்னுயிர்கள் தம்மை அடையவேண்டி இறைவன் வகுத்தளித்த வழி இரண்டு. அவை, சொல் உலகமும் மற்றும் பொருள் உலகமும். வன்னங்கள் (எழுத்துகள்) 51, பதங்கள் (சொற்கள்) 81, மந்திரங்கள் (சொற்றொடர்கள்) 11 ஆகியவை சொல் உலகில் அடங்குவன. புவனங்கள் 224, தத்துவங்கள் 36, கலைகள் 5 ஆகியவை பொருள் உலகில் அடங்குவன. அருவநிலையினவாகிய அத்துவாக்களில் மந்திரங்கள் குருதியாகவும், பதங்கள் முடியாகவும், வன்னங்கள் தோலாகவும், புவனங்கள் உரோமமாகவும், தத்துவங்கள் ஏழுவகைத் தாதுக்களாகவும், கலைகள் உறுப்புகளாகவும் அமைகின்றன என்பதை குமரகுருபரர்,

'மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்

தொந்தமுறும் வன்னமே தொக்காகப் - பந்தனையால்

ஒத்தபுவனத் துருவே உரோமமாத்,

தத்துவங்க ளேசத்த தாதுவா - வைத்த

கலையே அவயவாக் காட்டும் அத்துவாவின்

நிலையே வடிவமா நின்றோய் (கந்தர் கலிவெண்பா: கண்ணி:60- 62) என விளக்கியுள்ளார். அருவநிலையில் ஞானியரால் மட்டுமே உணரத்தக்க சிவத்தை அனைத்துயிர்களும் கட்புலன் காட்சியில் உணர்ந்துய்ய உருவத்திருமேனி வகைசெய்கிறது.

## உருவத்திருமேனி

இறைவனின் உருவத்திருமேனியானது, 'சகளத் திருமேனி' எனப்படும். 'சகளமாய் வந்ததென்று உந்தீபற' என்பது மணிவாசகரின் திருவுந்தியார் திருவாக்கு. இறைவனுக்குரிய உருவத்திருமேனிகள் - 64. அவற்றுள் போகவடிவமாவது, உயிர்களுக்கு இன்பத்தை ஊட்டுகின்ற உமாமகேசுவரர், சந்திரசேகரர், ரிஷபாரூடர், கல்யாணசுந்தரர் முதலான வடிவங்களாகும். ஞானத்தை வலியுறுத்துகின்ற தட்சிணாமூர்த்தி, சுகாசனர் முதலானவை யோக வடிவங்களாகும். வினை நீக்கத்துக்காக எழுந்தவையாகிய வேகவடிவங்கள் கங்காளர், வீரபத்திரர் போன்ற திருவுருவங்களாகும்.

## அருவுருவத்திருமேனி

அருவும், உருவும் ஆகிய பெருமானுக்கு அருவுருவாகிய நிலையும் உண்டு. இறைவனின் உருவத்திருமேனியில் அருவுருவாகிய இலிங்கத்திருமேனியே முதலில் தோன்றியதெனலாம். திருமாலுக்கும், நான்முகனுக்கும் எழுந்த அறியாமை மயக்கத்தை நீக்கியருளச் சோதிப்பிழம்பாகிய அருவுருவத் திருமேனி எழுந்தது.

## தத்துவநோக்கில் இலிங்கத் திருமேனி

இலிங்கத் திருமேனியின் தூண் போன்ற பகுதியானது, மேல்நோக்கி நீண்டு எரிகின்ற நெருப்பாகும். அதைத் தாங்குவது, ஆவுடையாகும். அது, உள்ளீடு உடையதாக, நீரைக் குறிக்கும். நிலமாகிய பூதம், நீரின் குறியீடாகிய ஆவுடையைத் தாங்குகிறது. ஆவுடை, நெருப்பாகிய இலிங்கத்தைத் தாங்குகிறது. அவ்வகையில், நிலம், நீர், நெருப்பு ஆகிய உருவப் பூதங்களை உள்ளடக்கியும், கட்புலனாகாத காற்று மற்றும் வான் ஆகிய அருவப் பூதங்களை உள்ளடக்கியும் விளங்குவதே, 'இலிங்கத் திருமேனி' யாகும்.

பெருமான், ஐம்பூதங்களாகவும் விளங்குபவன். நிலம், படைத்தல் தொழிலையும், நீர், காத்தல் தொழிலையும், நெருப்பு, அழித்தல் தொழிலையும், காற்று, மறைத்தல் தொழிலையும், வான், அருளல் தொழிலையும் குறிப்பன. இவற்றுள், நிலம், நீர், நெருப்பு ஆகியன, கண்ணுக்குப் புலனாகின்ற உருக்கொண்டுள்ளன. காற்றும், வானும், கட்புலனாகாமல், அருவமாக உள்ளன. ஐம்பூதங்களில், நடுவனதாகிய நெருப்பு, உருவுடைய நிலம், நீர் ஆகிய பூதங்களுக்கும், உருவில்லாத பூதங்களாகிய காற்று, வான் ஆகியவற்றுக்கு இடையேயும் நிற்கவல்ல தன்மையில், ஐம்பூதங்களையும் ஒருங்கே கொண்ட திருமேனியாக, இலிங்கத் திருமேனி விளங்குகிறது. அத்திருவுருவானது, அரிபிரமர்தம் அறியாமை மயக்கத்தை நீக்க எழுந்த அருளுருவாகும்.

## அறியாமை மயக்கில் ஆழ்ந்தனர்

பிரமனும், திருமாலும், 'யான்', 'எனது' என்று செருக்கி, 'தாமே மூவுலகுக்கும் முதல்வர்' என மயங்கினர். ஒருவருக்கொருவர், உயர்ந்தவர் தாமே எனத் தருக்கமும் செய்தனர். அது ஓயாத போராகப் பதினாறாயிரம் ஆண்டுகள் நீடித்தது. பற்பல பிரம்மாத்திரங்களும், நாராயணாத்திரங்களும் மோதிய போர் முற்றியது. பிரமன், பாசுபதப் பெரும்படையினையும், திருமால், உருத்திராத்திரத்தையும் விடுத்தனர். அந்நிலை, உயிர்களுக்குப் பெருந்தீமையினை விளைவிப்பதாக விளங்கியது. அதனைத் தவிர்த்தருளுகின்ற கருணையுடன், பெருமான், ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியாக வெளிப்பட்டான் என்பது காஞ்சி புராண மகாலிங்கப் படலத்தின் அருள் செய்தியாகும்.

## மயக்கினால் தருக்கினர்

பிரமனும், திருமாலும் அறியாமை மயக்கில் ஆழ்ந்திருந்ததால், பெருமானின் பெருநிலையினை உணர்தற்குரிய வாய்ப்பு அற்றவர்களாகி மயங்கினர். அரிபிரமர், பெருமானை அன்பினால் உணர முயலாமல், ஆயிரம் ஆண்டுகள் அறியாமையுடன் தேடித் திரிந்தனர். அதனால் பெருமான் அவர்களுக்கு, அடைய இயலாத அரும்பொருளாகவே விளங்கினான். ஆயினும், ஆருயிர்களின் அல்லல் நீக்குகின்ற அருளுருவாக இலிங்கத்திருமேனியை உணர்த்திக் காட்டவேண்டி, தானே அதனுள்ளிருந்து வெளிப்பட்டருளினான்.

ஆதியும் அந்தமும் இல்லாமலும், தொடர்வரிய நுண்மை கொண்டும் பெருமானே, சோதிவடிவில் தோன்றி விளங்குவதனை அவர்களால் உணர இயலவில்லை. மாறாக, பிரமன், அன்னப்பறவையாகியும், திருமால், பன்றியாகவும் உருக்கொண்டு, அடிமுடி தேடுகின்ற அறியாமைச் செயலுக்கே மேலும் தலைப்பட்டனர்' என்று மணிவாசகர் அவர்களது அறியாமையினைத் திருத்தெள்ளேணத்தில் குறித்தருளியிருப்பது, சிற்றின்ப நாட்டத்தையே நோக்கமாகக் கொண்ட உயிர்களின் அறியாமையைச் சுட்டுவதாகும்.

சோதிப்பிழம்பாக விளங்கித் தோன்றுவது, 'பரம்பொருளே' என்ற மெய்யுணர்வு அரிபிரமருக்கு வாய்த்திருப்பின், அவர்கள் இறைவனைத் தமது இருதயத்தானத்தில் வைத்துப் பூசித்து மேன்மையுற்றிருப்பர். ஆனால், அறியாமைமயக்கத்தில் ஆழ்ந்திருந்த அவர்கள் இறையுருவைக் கண்டுணரவில்லை. அவ்விருவரே அன்றி முப்பத்துமுக்கோடி தேவர் எவருக்கும் அத்தகைய மெய்யுணர்வுநிலை வாய்ப்பதில்லை. அதனால் இறைவன் என்றும் அவர்களுக்கு அரியவனாகவே விளங்குவதை மணிவாசகர் திருத்தெள்ளேணத்தில், 'ஆவா அரிஅயன்இந் திரன்வானோர்க் கரியசிவன்' என்று சுட்டியுள்ளார்.

பிறவாமை பெற்றுய்கின்ற பெருநோக்கம் வாய்க்கின்ற மண்ணுலகத்தவர்களுக்கு இறைவன் அருவமும் உருவமும் அருவுருவமுமாகிய நிலைகளில் நின்றருள்கின்றான். பக்திநெறி வழியே அவற்றை உணர்ந்துய்வதற்கு, 'அருவாய் உருவமும் ஆயபிரான்' (பாடல்: 2) என்று மணிவாசகர் திருத்தெள்ளேணத்தில் நன்னெறி உரைக்கின்றார்.

## ஞானகுருவாகி இறங்கியருள்வான்

விண்ணோர்கள் போகமயக்கிலும், அதிகார வலிமையிலும் நாட்டம் கொண்டு, தமக்குத்தாமே அழிவைத் தேடிக்கொள்வர். அதனால் விளைகின்ற துன்பம் தீரவேண்டி இறைவனைச் சரண்புகுந்து உயிர்ப்பிழைப்பர். இறைவனை, 'விண்ணோர் முழுமுதல்' எனலாம்.

பாதாளத்தார் புவனங்கள் அனைத்துக்கும் தாமே ஆதாரமாக இருந்து மேலுலகங்களைத் தாங்குவதாகத் தருக்குகின்றனர். ஆனால், இறைவனின் பெருந்திறமோ, ஊழிக்காலத்தில் அண்டங்கள் அனைத்தையும் தனக்குள் ஒடுக்கி மீளத்தோற்றுவிக்கின்ற நுட்பமுடையது. அதனால் சிவமே பாதாளத்தார் வித்து என்பதும் பொருத்தமாகும்.

மண்ணுலக மக்களோ, ஆணவமலப்பிணிப்பின் வலிமை கெடுகின்றவகையில் பிறப்பிறப்பில் மாறிமாறித் துன்புற்று இளைப்பாறுதலை நாடுகின்ற பக்குவமுடையவர்களாகின்றனர். 'மண்ணுலகத்தார் சிவத்தைத் தமது பிறவிப்பிணிக்கு மருந்தாகக் கொள்கின்றனர்' என்பது மணிவாசகர் திருவாக்கு.

'விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து

மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோம்

கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்

தென்னா தென்னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ' (திருத்தெள்ளேணம்.பா.19)

பக்திநெறி வழியே பண்பட்டு சிவத்தைச் சார்கின்ற மெய்யுணர்வை உயிரறிவில் வலுப்படுத்தவேண்டி, கருணையே உருவான இறைவன் மண்ணுலகில் மானுடச்சட்டை தாங்கிய ஞானகுருவாக வந்தருள்கின்றான் (Vasanthakumar, 2016).

## அடியவர்களை ஆட்கொள்கின்ற அரியசிவம்

மண்ணுலகில் வாழ்கின்ற பக்குவர்களுக்கு அருள்செய்ய இறைவன் தானே அவர்களை நாடிச்செல்கின்றான். அவர்களை, வாவா என்று வலிய அழைத்து ஆட்கொள்கின்றான் என்று மணிவாசகர் உரைக்கின்றார். அவ்வருளனுபவத்துக்குச் சான்றாக, தாம் திருப்பெருந்துறையில் ஆட்கொள்ளப்பட்ட அருளனுபவத்தை மணிவாசகர் திருத்தெள்ளேணத்தில்,

'ஆவா அரிஅயன்இந் திரன்வானோர்க் கரியசிவன்

வாவாவென் றென்னையும் பூதலத்தே வலித்தாண்டு கொண்டான்

பூவார் அடிச்சுவ டென்தலை மேற் பொறித்தலுமே

தேவான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ' (திருத்தெள்ளேணம். பா:7)

எனக் குறித்தருளியுள்ளார்.

வானவர்களுக்கும் அரியசிவம், மண்ணுலகில் அடியார்கள் அனைவரையும் ஆட்கொண்டருளும் என்பதைக் கேட்ட அளவில் பக்குவமில்லாதவர்கள், அவ்வாறு நிகழவும் வாய்ப்புளதோ? என்று எள்ளிநகையாடவும் வாய்ப்புண்டு. அவர்களது அறியாமையையும் எண்ணிநாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்று மணிவாசகர் பக்திநெறி காட்டுகிறார் (Vasanthakumar, 2016).

'அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்

தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை

உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட் டுலகமெல்லாம்

சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ'.

## பிறவிக்கடலும் கருணைக்கடலும்

தாம் செய்கின்ற தவமும், செபமும் இறைவனை உணர்வதற்குக் கருவியாகும் என்று தருக்குகின்ற முனிவர் கூட்டத்துக்கு இறைவன் அரியவனாகின்றான். அவர்கள் இறைவனை உணர்வதற்குத் திருவருள் கண்ணாக வாய்ப்பதில்லை. தக்கன் வேள்வி தகர்க்கப்பட்டதும், தாருகாவனத்து முனிவர்களின் வேள்வி சிதைக்கப்பட்டதும், அவர்களின் அறியாமையை நீக்கியருளிய அருள்செயல்கள் எனலாம். உண்மையன்பாகிய பக்தியால் உள்ளம் உருகி, ஊற்றெனக் கண்ணீர் பெருகினால், அரும்பொருளான இறைவன் அன்புருவில் வெளிப்பட்டருள்வான். 'பக்தி வலையிற் படுவோன் காண்க' என்பது மணிவாசகரின் அருளனுபவத் திருவாக்கு. பக்திநெறி வழியே இறவாத இன்ப அன்பினைப்பெற வேண்டியே திருநாவுக்கரசர், 'மனித்தப்பிறப்பும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்று இறைவனிடத்தில் வேண்டினார். காரைக்காலம்மையாரும், 'பிறப்புண்டேல்' உன்னை என்றும் மறவாமை வேண்டும்' என்று விண்ணப்பித்துச் சிறந்தார்.

மேற்கண்ட அடியார்களின் பக்குவநிலையற்ற பல்லுயிர்கள், துன்பமாகிய பிறவிக்கடலையே அறிந்துள்ளன. அவை, பரங்கருணைப் பெருங்கடலாகிய இறைவனை உணர்வதற்கு மணிவாசகர் வழிகாட்டுகின்றார். 'பக்திநெறியில் ஞானவேட்கை மிகுந்தால், இறைவனை அருளமுதப் பெருங்கடலாக உணர்ந்துய்யலாம். உள்ளம் உருகி, உடல் பூரித்து, ஞானவேட்கை முற்றிலும் தணிகின்றவகையில் திருவருளமுதைப் பருகி உய்யலாம்' என்று மணிவாசகர் அடியார்களை ஆற்றுப்படுத்துகிறார்.

'உருகிப் பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாம் தெள்ளேணம் கொட்டாமோ'

மேன்மேலும் அளவிறந்து வளர்கின்ற ஞானவேட்கையைத் தணிக்கின்ற அருள்கடலாக இறைவனை மணிவாசகர் மேற்கண்ட பாடலில் உருவகித்துள்ளார். கடல்நீர், வேட்கை தணிக்கின்ற இயல்பற்றது. மாறாக, சிவமாகிய அருளமுதப்பெருங்கடலின் இன்பவெள்ளமானது, தன்னைப் பருகுவோரின் பேரின்பவேட்கையை மேலும்மேலும் மிகச்செய்வது. திருவடியே அதன் ஊற்றுக்கண்ணாக இருந்து, திருவருளைக் கடலெனப் பெருகச் செய்வது' என மணிவாசகர் இலக்கியநயம்பட பக்திநெறியை விளக்கியுள்ளார். ஆறறிவுகொண்ட மனிதகுலத்தவருக்கு மட்டுமன்றி அனைத்துயிருக்கும் இறைவன் இரங்கியருள்வான் என்பது ஞானகுருவாகிய மணிவாசகரின் திருவாக்கு. அத்தி-யானை அருள்பெற்ற வரலாறு அதற்குச் சான்று (Vasanthakumar, 2016).

## அத்தியின் பக்திச்சிறப்பு

இறைவன் பக்தியில் சிறந்த யானைக்கு இரங்கியவாறு, திருப்பெருந்துறையில் தம்மையும் ஆட்கொண்டார். அவ்வண்ணமே, பக்திநெறியில் அடியார்களையும் ஆட்கொண்டருள்வான் என்று வலியுறுத்துபவராக மணிவாசகர்,

'முத்திக் குழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக் கருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி

தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ'

என்று பாடியுள்ளார். மேற்கண்ட பாடலில் நிறையறிவினராகிய முனிவர்களின் அறியாமையும், பக்திப்பண்பாட்டினால் பேரின்பநெறி நின்ற யானையின் அருள்வன்மையும் விளக்கப்பட்டுள்ளன (Vasanthakumar, 2016).

## அத்திக்கு அருள்தந்த பக்திநெறி

உயிரானது, பக்திநெறி வழியே பரம்பொருளை அடைந்துய்வதற்கு இயல்பாகவே அதனறிவில் நீங்காமல் விளங்குகின்ற ஆணவமலம் காரணமாகிறது. அறியாமை ஆணவமலத்தின் வெளிப்பாடாகும். அதனால் மனிதப்பிறப்பைப் பக்திநெறிவழியே பண்படுத்திக் கொள்ளும்படி மணிவாசகர் அறிவுறுத்துகிறார். மண்ணுலகில் பக்திநெறிக்குரிய வாய்ப்புகளும், அவற்றைப் பயன்கொள்கின்ற ஆறாவது அறிவும் வாய்த்துள்ள மானுடர் அதுகுறித்து அறியாதவர்களாக சிற்றின்பநோக்கில் சிறுசெயல்களில் ஈடுபட்டு அறிவழிகின்ற அறியாமையினை மணிவாசகர் அறிவுறுத்த முனைகின்றார். ஐராவதமாகிய வெள்ளையானையின் அறியாமையையும், பக்திநெறி வழியே அது நன்னிலை பெற்றுச் சிறந்ததையும், மனிதர்தம் நிலையுடன் ஒப்பிட்டு விளக்கியுள்ளார்.

வெற்றிவீரனாகிய இந்திரனைச் சுமக்கின்ற மிதப்பில், வெள்ளையானையானது சிவனாரின் திருமுடியை அலங்கரித்த தாமரையைத் தனது காலால் சிதைத்தது. அதைக் கண்ட துருவாசர், வெள்ளையானை தனது நிறமிழந்து மண்ணுலகில் சுற்றித்திரிந்துத் துன்பமுற வேண்டும் என்று வன்மொழி கூறினார். வெள்ளையானையும் அவ்வண்ணமே மண்ணுலகில் பலகாலம் உழன்று, திருஆலவாயாகிய மதுரையில் சிவபூசை செய்து உயர்ந்தது. இவ்வரலாறானது, திருவிளையாடல் புராணத்தின் மதுரைக்காண்டத்தில், வெள்ளானை சாபம் தீர்த்த படலமாக இடம்பெற்றுள்ளது. பக்திநெறிவழியே அடியார்களும் அறியாமை நீங்கியுய்வதற்காகத் திருத்தெள்ளேணத்தில் அத்தி அருள்பெற்ற வரலாற்றை மணிவாசகர் பாடியுள்ளார்.

## பக்திநெறியால் பண்படுவோம்

அத்தி-வெள்ளை யானை - உயிர்.

சிவனின் திருமுடித் தாமரை - மனிதப்பிறப்பு.

தாமரையைச் சிதைத்த யானையின் அறியாமை - பெறுவதற்கரிய மனிதப்பிறவியைப் பக்திநெறியால் பண்படுத்திக்கொள்வதற்கு முனையாத அறியாமை.

வெள்ளையானை நூறாண்டுகள் தனது நிலை மறந்து கருமைவண்ணம் பெற்று திரிதல் பக்திநெறியில் முக்கரணங்களாலும் மெய்ப்பொருளை உணர்ந்து உய்யாமல், சிற்றின்பத்தேடலில் மனிதப்பிறப்பைச் செலவிட்டு, வினைபெருக்கி, பிறந்தும் இறந்தும் இளைத்தல். ஆலவாயின் எல்லையில் அத்திக்கு மெய்யுணர்வு உதித்தல் - இருவினைஒப்பு வாய்த்த காலத்தில் உயிருக்கு இறைவனே ஞானகுருவாக வந்தருளுதல்.

ஆலவாயிலிலிருந்து யானை மேற்கொண்ட சிவபூசை உயிரானது, பக்திநெறி வழியே இறைவனிடத்தில் உண்மை அன்பு மேலிட நிற்றல். சிவபூசையின் பயனாக மீண்டும் தனது உண்மையான உருவைப்பெற்ற யானையின் மகிழ்ச்சி - பக்திநெறியால் 'தான்' என்கின்ற ஆணவ அறியாமை நீங்கிய உயிரிடத்தில் திருவருளின்பம் மேலிடுதல்.

மனிதப்பிறப்பினைப் பெற்றவர்களாயினும், மெய்யறிவு வாய்க்காமல் சிற்றின்பத்தையே நாடுகின்ற மனிதர்கள், அறியாமையே தமதுநிலையெனக் கொண்ட தேவர்களைப் போன்றவர்கள். சிற்றின்பநாட்டத்தை மட்டுமே நாடுகின்ற அவர்கள், அதற்குரிய இளமைமுதலான வாய்ப்புகள் நிலைக்கவேண்டி, அமுதத்தை உண்டு மூப்படையாமல் வாழ்கின்றனர். அவ்வாறே மனிதர்கள் பலரும் சிற்றின்பத்தையே பொருளாகக் கருதி, அதைத் துய்ப்பதற்குரிய உடம்பையும், இளமையையும், செல்வத்தையும் பெறுவதையே வாழ்க்கையின் நோக்கமாகக் கொள்கின்றனர். ஆனால், அவர்களது இன்பவிழைவுக்கு நிலைக்களமாகிய உடம்பும், இளமையும், செல்வமும் நிலையில்லாதவை என்று தெளிகின்ற மெய்யுணர்வு அவர்களுக்குத் தலைப்படுவதில்லை. அத்தகைய அறியாமையாகிய பேரவலம் தம்மைத் தாக்காமல் தடுத்தாண்டவாறு, அடியார் அனைவருக்கும் ஞானநிலை வாய்த்தருளச்செய்கின்றான். மண்ணுலகத்தவர் மீது இறைவன் கொண்ட தனிக்கருணையை மணிவாசகர்,

'அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே

பவமாயங் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி

நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து

சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ'

எனப் பாடிக்களித்துள்ளார்.

## முடிவுரை

பக்திநெறி வழியே சிற்றின்பமயக்கம் நீங்கிய சிந்தையும், சொல்லும், செயலும் சீவனைச் சிவமாக்கும். தன்னை மறந்து, தனக்கெனத் தேடல் ஒழிந்து, தன்னுள் சிவத்தை உணர்ந்துணர்ந்து, 'அதுவே தான்' என்ற பெருநிலைக்கு ஆட்படும். இவ்வாறு பக்திநெறியால் சீவன் சிவனாக மேம்பட்ட பெருநிலையைத் திருப்பெருந்துறையில் கண்டுணரலாம். அங்கு, சிவனாரின் பெருநிலையில் மணிவாசகரே வைத்து வழிபடப்பெறுகின்றார். அவரது அருளனுபத்தை உணர்ந்து பக்திநெறிக்கு ஆட்படுவதற்கு, 'திருத்தெள்ளேணம்' அருள் இலக்கியக் கருவியாகும். அதில் சுட்டப்பட்டுள்ளவாறு திருவருளின் துணைசிறந்தால், ஞானகுருவின் உபதேசமும் வாய்த்து, உயிரறிவில் மெய்யுணர்வு நாளும் தழைக்கும். அம்மெய்யுணர்வு உயிரிடத்தில் தடைப்படாத வகையில் திருவருள் உயிருக்குத் துணையாகி அவ்வுயிரை பக்திநெறியில் சிவத்துடன் ஒன்றச்செய்யும். அவ்வளவில், உயிரானது தன்னை மறக்கும். தன் செயல் என்கின்ற தற்போதத்தையும் இழக்கும் தான் இன்னதனை உணர்கிறோம் என்பதையும் உய்த்துணர இயலாத பரவசத்தில் திளைக்கும். உயிரானது, 'அதுவே தானாகி' அளவில்லாத ஆனந்தப்பெருக்கில் நிலைக்கும். அத்துடன், பக்திநெறிக்குத் தலைப்படுகின்ற உண்மையடியார்கள், 'இறைவனால் இன்னவகையில், இன்னதன்மையில் ஆட்கொள்ளப்படுவார்கள்' என்ற நன்னிலையை அடியார்களுக்கு அறிவுறுத்துகின்ற ஞானகுருவாக மணிவாசகர் விளங்குவதைத் திருத்தெள்ளேணத்தின் வழியே உணரலாம்.

### References

Kumaraguru Swamigal Prabandha Thirattu, (2004) annamalai university Veliyedu, Chennai, India.

Vasanthakumar Ira., Manivasagar Aruliya Thiruvasagam, 1st edition, Panniru Thirumurai Ayivu Maiam veliyedu, Coimbatore, India.

Vasanthakumar Ira., Umapati Sivanaar Aruliya Siddhanta attagam, 1st edition, Panniru Thirumurai Ayivu Maiam veliyedu, Coimbatore, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License